1993 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. வேலையா.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலம் கடன் பெறுவதில், பொதுத்துறை வங்கிகள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால், பொதுத் துறை வங்கிகளைப் பொறுத்த வரையில், கடன் கொடுப்பதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள், காலத்தைக் கடத்துகிறார்கள். அரசாங்கத்திலிருந்து பெறுகிற சப்சிடியை டெபாசிட்டாக வைத்துக் கொண்டு, நீண்டகாலம் வரை அந்த மனுவை வைத்திருந்து, பிறகு கடைசியில் கடன் இல்லை என்று சொல்வதால், அரசாங்கத்திலிருந்து கொடுத்த பணத்தை அவர்கள் வைத்துக் கொள்வதோடு பிறகு அந்தப் பணத்தைப் பயன்படுத்த முடியாமலே போய்விடுகிறது. இதை நான் பலமுறை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பேசியும், வங்கி அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்தவிதமான பதிலும் கிடைப்பதில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நமது அரசின் மூலமாக மத்திய அரசை அணுகி, அதற்கு நிரந்தரமான தீர்வை ஏற்படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கருத்துக்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 219, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

219—

பழவேற்காடு பகுதியில் இறால் மீன் ஏற்றுமதி நிறுவனம்.

*15997—திரு. ஏ. ரவிக்குமார் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, பழவேற்காடு பகுதியில் மீனவர்கள் பிடிக்கின்ற இறால் மீன்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசு அங்கு ஏற்றுமதி நிறுவனம் (Exp rt Company) துவங்குவதற்கு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் கடற்பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையம், சென்னை-14 என்ற மத்திய அரசு நிறுவனம் இறால் வளர்ப்பில் ஈடுபடுவோரை ஊக்கப்படுத்தியும் இறால் ஏற்றுமதி செய்வோருக்கு உதவிகளை நல்கியும் வருகிறது. ஆதலின் பொன்னேரி தொகுதியில் அரசினால் ஏற்றுமதி நிறுவனம் துவங்குவதற்கு உடனடி தேவையோ, திட்டமோ தற்போது இல்லை.

முற்பகல் 10-55

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய திருநாட்டில் ஈடு இணை இல்லாத தலைவியாக திகழ்ந்து கொண்டிருக்கும் நம்முடைய இதய தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் மீனவர்களுக்கு இலவசமாக கட்டித் தருகின்ற தொகுப்பு வீடுகளுக்கு ரூபாய் 17 ஆயிரம் என்று இருந்ததை ரூபாய் 26 ஆயிரமாக உயர்த்தியதற்கும், சுதந்திரம் அடைந்து இதுவரை சரியான குடி தண்ணீர் இல்லாத சுமார் 25 மீனவ குடும்பங்களுக்கு ஆட்சிப் பொறுப்பேற்ற ஆறே மாதத்தில் சுமார் 32 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதலளித்திருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அவர்களுடைய அடிப்படை வசதிகளை அனைத்தும் நிறைவேற்றிய நம்முடைய அரசு பொருளாதார வசதிகளை அதிகரிக்கின்ற வகையில், அவர்கள் பிடிக்கின்ற இறால் மீன்களை குத்தகை, தரகு இல்லாமல் கம்பெனிக்கு நேரடியாக விற்று அங்கே இருந்து ஏற்றுமதி செய்கின்ற வகையில் எக்ஸ்போர்ட் கம்பெனி நிறுவுவதற்கு அடுத்த ஆண்டிலாவது நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டைப் பொறுத்த மட்டில் தமிழகத்திலே மட்டும் கிட்டத்தட்ட 17 ஆயிரம் டன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. அதன் மூலம் நம்முடைய இந்திய திருநாட்டிற்கு கிடைக்கப் பெற்றிருக்கிற அந்நிய செலாவணி சுமார் 228 கோடி ரூபாய் ஆகும். செங்கை—எம்.ஜி.ஆர். மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் பிடிக்கின்ற மொத்த இறால் மீன்கள் 70 டன்கள். அதிலும் பொன்னேரி தொகுதியைப் பொறுத்த மட்டிலே கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு ஒரு டன்னுக்கு குறைவாகத்தான் அங்கே இறால் பிடிக்கப்படுகிறது. இந்த குறைவான கொள்முதலைக் கொண்டு நாம் ஒரு நிறுவனத்தை அரசினுடைய சார்பிலே தொடங்குவது என்பதற்கு சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

1993 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன், திரு. ரவிக்குமார் இரண்டாவது கேள்வியை முடிக்கட்டும்.

திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொன்னேரி தொகுதியில் சுமார் 15 சதவீதம் பேர்கள் மீன் பிடி தொழிலைச் செய்கிறார்கள். பழவேற்காடு பகுதியில் சுமார் 25 மீனவ கிராமங்கள் இருக்கின்றன. இவர்கள் பிடிக்கின்ற பெரும்பாலான இறால் மீன்களை குத்தகைதாரர்கள் குறைந்த விலையில் அங்கே வாங்கி அவற்றை எக்ஸ்போர்ட் கம்பெனிகளுக்கு அதிக விலைக்கு விற்கிறார்கள். கஷ்டப்படுகிற மீனவர்களுக்கு, அவர்களுக்கு கிடைக்க வேண்டிய முழு பலனும் கிடைப்பது இல்லை. எனவே எக்ஸ்போர்ட் கம்பெனி நிறுவுவதற்கு பதிலாக அனைத்து இறால் மீன்களையும் பழவேற்காட்டிலேயிருந்து வாங்கி அவற்றை முழுவதுமாக எக்ஸ்போர்ட் கம்பெனிகளுக்கு அனுப்புவதற்கு நம்முடைய அரசானது—மீனவர்களுடைய நன்மைகளைக் காக்கின்ற ஒரு ஒப்பற்ற அரசானது—மீண்டும் இல்லை என்ற சொல்லை பரிசீலனை செய்து ஆம் என்று சொல்வதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கொள்முதல் செய்வது பற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன், இது பழவேற்காடு பற்றிய கேள்வி.

திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறால் மீன்கள் உற்பத்தியிலே நம தமிழகம் தன்னிறைவு பெற்று விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக நமது இந்திய திருநாட்டைப் பொறுத்த மட்டிலே அகில உலக ரீதியில் 7ஆவது ஆக இருந்தாலும் நம்முடைய தமிழகத்தின் மூலம் இந்திய திருநாட்டிற்கு கிடைக்கப் பெற்றிருக்கிற அந்நிய செலாவணி 228 கோடி ரூபாய் ஆகும்.

இதனை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காக பல்வேறு சிறப்பான காரியங்களை ஆற்றுவதற்காக நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டிருக் கிறார்கள். இந்திய திருநாட்டைப் பொறுத்த மட்டிலே இன் றைக்கு தமிழகம் 3ஆவது மாநிலமாக இருக்கலாம். ஆனால், நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்து வருகின்ற நடவடிக்கைகளின் காரணமாக இமால் பிடிப்பதைப் பொறுத்த மட்டில் முதலாவது மாநிலமாக, தன்னிறைவு பெற்ற மாநிலமாக நிச்சயமாக உருவாகும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட் டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 220, திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச் சர்.

220—

தொட்டியம் தொகுதியில் தீப்பெட்டித் தொழிற்சாலை

*9799— திரு. என். ஆர். சிவபதி :
மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொட்டியம் தொகுதியில் தீப்பெட்டி, தீக்குச்சி தயா ரிக்கும் தொழிலில் அதிகம் பேர் ஈடுபட்டுள்ளதால் தீப்பெட்டித் தயாரிக்கும் தொழிற்சாலை துவங்கும் திட்டம் அரசிடம் உள் ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தொட்டியம் தொகுதியில் தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்டியம் தொகுதியில் நிறைய தீப்பெட்டி தொழிற்சாலைகளை தனியார் நிறுவனத்தினர் நடத்தி வருகின் றனர். அதனால், அதிக தனியார் நிறுவனத்தினர் இலாபத்தை அமைத்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அரசுக்கு அதிக வருமானம் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் ..(மணியடிக்கப் பெற்றது.)